## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (2)

# பண்பாடும் வைராக்கியமும்!

### கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

லியோன்கா ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தான். அன்று நடைபெற்ற சம்பவங்களை நினைத்த பொழுது அவனுக்குச் சங்கடமாக இருந்தது. அவன் லெனினிடம் குறும்பாகப் பேசியதோடு. நீச்சலிலும் அவரைத் தோற்கடித்து விட்டான். அடுத்த தடவை அவரைப் பார்க்கும் போது அதற்குப் பரிகாரம் செய்வதென்று முடிவு செய்து கொண்டான்.

மறுநாள் அவன் ஆற்றங்கரைக்குப் போனான். மாலை வரையிலும் அங்கேயே இருந்தான். ஆனால் லெனின் அங்கே வர வில்லை. இப்படியே ஒரு வாரத்துக்கு மேல் அவன் தினமும் ஆற்றங்கரைக்குப் போனான். நல்லவேளையாகப் பத்தாவது நாளன்று லெனினை மறுபடியும் அங்கே பார்த்தான்.

"என்ன, தண்ணீர் எப்படி இருக்கிறது?" என்று விளதீமிர் இலியீச் கேட்டார்.

"வெதுவெதுப்பாக இருக்கிறது. நல்ல வெதுவெதுப்பு. நீங்கள் நம்பக் கூட மாட்டீர்கள். விளதீமிர் இலியீச்".

"அப்படியானால் தண்ணீர் உண்மையிலேயே வெதுவெதுப்பாகத்தான் இருக்க வேண்டும்" என்றார் லெனின்.

எப்படியாவது லெனினைத் தண்ணீரில் குதிக்கச் செய்ய வேண்டுமென்று லியோன்கா விரும்பினான்.

"தண்ணீரில் நீந்துவது சுகமாக இருக்கிறது. இறகு மெத்தையில் படுத்திருப்பது போல இருக்கிறது" என்றான் லியோன்கா.

லெனினும் லியோன்காவும் மறுபடியும் நீச்சல் போட்டியில் ஈடுபடுவதென்று முடிவு செய்தார்கள். ஒரு குச்சியைத் தண்ணீரில் தூக்கி எறிந்தார்கள். உடனே இருவரும் தண்ணீரில் குதித்தார்கள். லியோன்கா இந்தச் சந்தர்ப்பத்துக்காகத் தான் காத்துக்கொண்டிருந்தான்.

லியோன்கா நீந்தியது மாதிரித் தோன்றினாலும் அவன் உண்மையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அது மட்டுமல்ல. தன்னுடைய தந்திரம் வெளியே தெரியாமல் மறைத்துக் கொண்டான். ரொம்பவும் சிரமப்பட்டு மூச்சு விடுவது போல நடித்தான்.

ஆனால் லெனின் இதை கவனித்து விட்டார். லியோன்கா பக்கம் திரும்பினார்.

"என்ன தந்திரம் செய்கிறாய்?"

"விளதீமிர் இலியீச்! ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?" என்று லியோன்கா மறுப்புத் தெரிவித்தான். அவன் லெனினிடம் பொய் சொன்னான்! அதிலும் சிறிதும் வெட்கப் படாமல் பொய் சொன்னான். அவன் பொய் சொல்கிறான் என்பதை லெனின் புரிந்து கொண்டார். அவனுக்குச் சவால் விடுவதென்று தீர்மானித்தார்.

விளதீமிர் இலியீச் தன்னுடைய வேகத்தைக் குறைத்தார். அவர் திரும்பிப் பார்த்தார் - லியோன்காவும் வேகத்தை குறைத்து விட்டான். லெனின் மேலும் வேகத்தைக் குறைத்தார். ஆனால் அப்பொழுதும் லியோன்கா, அவரை முந்த வில்லை. அவர்கள் அந்தக் குச்சிக்கு அருகில் வர வர அவர்களுடைய நீச்சல் வேகமும் குறைந்தது. இப்பொழுது அவர்கள் நீச்சலை நிறுத்தி விட்டு மிதந்து கொண்டிருந்தார்கள்.

லெனின் லியோன்கா பக்கம் திரும்பினார். "இப்பொழுது என்னிடம் மாட்டிக் கொண்டாய்" என்றார்.

தன்னுடைய தந்திரம் அம்பலமாகி விட்டது என்பதைப் புரிந்து கொண்ட லியோன்கா. அவமானத்தால் தலையைக் குனிந்தான்.

"லியோன்கா! இது சரியில்லை" என்றார் லெனின். அப்பொழுது அவர்கள் கரைக்குப் பக்கமாக இருந்தார்கள்.

"நாம் மறுபடியும் போட்டியை ஆரம்பிக்க வேண்டியதுதான்".

மறுபடியும் அவர்கள் குச்சியைத் தண்ணீரில் விட்டெறிந்தார்கள்; மறுபடியும் இருவரும் தண்ணீருக்குள் குதித்தார்கள். தன்னுடைய மோசடி பலிக்காதென்று லியோன்காவுக்குப் புரிந்தது. எனவே இப்பொழுது அவன் தன்னுடைய முழு பலத்தோடும் நீந்தினான். அவன் என்ன பாடுபட்டும் லெனினைத் தொட்டு நீந்த முடியவில்லை. அவரை முந்திவிட வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தான். கைகளை மாற்றி மாற்றி வேகமாகப் போட்டான். ஆனால் பலனில்லை. இப்பொழுது அவனுக்கு உண்மையாகவே மூச்சு வாங்கியது. அவனால் லெனினைத் தொடர்ந்து நீந்த முடியவில்லை.

லியோன்கா போட்டியில் தோற்று முகவாட்டத்தோடு வீட்டுக்குத் திரும்பினான்.

ஆனால் விளதீமிர் இலியீச் மகிழ்ச்சி பொங்க விடுதிக்குத் திரும்பினார்.

"நம்முடைய அணி பலமிழந்து விட்டதாக நினைக்க வேண்டியதில்லை என்பதை இது காட்டுகிறது. நம்மிடம் பலமிருக்கிறது...."

அவர் போகும் வழியில் இப்படி சிந்தித்தார். "இன்றைக்குப் பெரிய வெற்றியே. இனி மேல் நான் ஓய்வெடுக்க வேண்டியதில்லை என்று தெரிகிறது. பழைய வெடிமருந்துக் கிடங்குதான். ஆனால் இன்னும் வெடிமருந்து இருக்கிறது."

பாவம்! லியோன்கா. பரிதாபமாக வீட்டுக்குத் திரும்பினான். அவன் லெனினுக்கு முதல் இடம் கொடுப்பதற்குத் தான் விரும்பினான். அவன் விரும்பியபடியே நடந்தது. ஆனால்..... போட்டி வளர்ச்சியடைந்த பொழுது இப்படி முடிவு ஏற்படும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை."

உடன்பிறப்பே, இந்த நிகழ்வு எதை உணர்த்துகிறது? அல்லது எந்தப் பாடத்தை அறிவுறுத்துகிறது? தோல்வியைத் தாங்கிப் பழகிடாத ஒரு வைராக்கிய உள்ளத்தையும் - தோற்றவர், துவண்டுவிடாமல் இருக்க வேண்டுமே என்ற ஓர் நல்ல எண்ணத்தையும் புலப்படுத்துகிறது! லெனின் வாழ்க்கையில் சுட்டிக்காட்டப் படும் இந்த நிகழ்வு. இரு விதமான இயல்பும் இளைஞர்களுக்கும் வாய்த்திட வேண்டும் என்று எண்ணுகிறோம் அல்லவா? அந்த இனிய இயல்பு லியோன்காவுக்கு அமைந்துள்ளது போல நமது இளைஞர்களுக்கும் அமைய வேண்டும் என்பதுதான் என் விருப்பம். அப்போதுதானே அகவையில் மூத்தோர் பாராட்டுவர்! புகழ்வர்!

அன்புள்ள

மு.க.

(முரசொலி - 8.11.2007)

---

புதுக்கோட்டையில் 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

## சிறந்த சங்கங்களுக்கு பாராட்டு - கேடயம் - பயனாளிகளுக்கு நல உதவிகள்!

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - கே.ஆர்.பெரியகருப்பன் - சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்! கே.கே.செல்லபாண்டியன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, நவ. 24 -

புதுக்கோட்டை மாவட்டம், ஏ.டி.ஆர். திருமண மஹாலில், கூட்டுறவுத் துறையின் சார்பில், 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என். சுப்பையன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா ஆகியோர் தலைமையில் (20.11.2023) அன்று துவக்கி வைத்து, மாவட்ட அளவிலான சிறந்த சங்கங்களுக்கு பாராட்டு - கேடயம் மற்றும் பயனாளிகளுக்கு பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகள், கூட்டுறவு வார விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் வினாடி வினாப் போட்டி உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுப் பொருட்களை வழங்கினார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில், மகளிர் சுயஉதவிக்குழுக்கடன், பயிர்க்கடன், விவசாய கூட்டு ப் பொறுப்பு குழுக் கடன், கால்நடை வளர்ப்பு மூலதனக்கடன், மத்தியகாலக்கடன், மாற்றுத்திறனாளிகள் கடன், கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் கடன், சிறுவணிகக் கடன், மகளிர் தொழில்முனைவோர் கடன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் புரிவோர் கடன், கூட்டுறவு சிக்கன நாணய சங்க கடன், தனிநபர் சம்பளக்கடன், பணிபுரியும் மகளிர் கடன், பண்ணைச் சாராக்கடன், வீடு அடமானக்கடன், வீட்டுவசதிக்கடன் உள்ளிட்ட கடனுதவிகளை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வழங்கினார்கள். மேலும் கூட்டுறவு நிறுவனங்களின் தயாரிப்பு மற்றும் சேவை தொடர்பான கண்காட்சி அரங்கினையும் பார்வையிட்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் மூலம் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் ஏழை, எளிய பொதுமக்களின் நலனிற்காக கூட்டுறவுத்துறையின் மூலம் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு வழி ஏற்படுகிறது. மேலும் கூட்டுறவு கடன் சங்கங்கள் நமது அன்றாட வாழ்க்கையில் முக்கிய பங்காற்றி வருவதன் மூலம் பல்வேறு வகையான கடன் உதவிகள் சுயஉதவிக்குழு உறுப்பி னர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டு தொழில் முனைவோர்களாக உருவாக்கி வருகிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் பெண்கள் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் அதிக அளவில் கடன் உதவி பெற்று இந்தியாவில் முன்னோடி மாநிலமாக தமிழகம் விளங்கும் வகையில் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். இதன்மூலம் நமது குடும்பமும், நாடும் பொருளாதாரத்தில் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டுள்ள "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" மூலம் பயனாளிகளுக்கு மாதம் ரூ.1000/ அரசு சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் ரூ.1000/ வரவு வைக்கப்பட்டு வருகிறது. விளிம்பு நிலையில் வாழ்ந்து வரும் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ உறுதி செய்யும் இந்த திட்டம் மகளிரின் மனதில் மகிழ்ச்சியை மலரச் செய்துள்ளது. மேலும், அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வாய்ப்பாகவும் அமைந்துள்ளது.

மகளிரின் உயர்வுக்கு பெரும் பங்காற்றி தமிழசு அரசு வழங்கி வரும் இந்த உரிமை தொகையில் மேலும் ஒரு வருமானம் பெற அதாவது "வரவுக்கு மீனாடும் ஒரு வட்டி" என்பது போல் சேமிக்க ஒரு சிறப்பு தொடர் இட்டு வைப்பு திட்டம் அகில இந்திய மாநில அளவிலான கூட்டுறவு வார விழாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பெயர் "தமிழ்மகள்" சிறப்பு தொடர் இட்டு வைப்புத் திட்டம் புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் 33,645 கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கணக்குகள் உள்ளன. இதில் முதற்கட்டமாக 3,000 கணக்குகளுக்கு தொடர் இட்டு வைப்பு துவங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள், இத்திட்டத்தின் மூலம் தொடர்ச்சியாக வைப்பு தொகையினை செலுத்துவதன் மூலம் மகளிரிடம் தவறாமல் சேமிக்கும் பழக்கத்தை வளர்க்க உதவுகிறது. மகளிரின் குறுகிய மற்றும் நீண்டகால தேவைகளுக்கு இத்தொகை உதவுகிறது. இத்திட்டத்தின் மூலம் இட்டு வைப்பு திட்டத்திற்கு வழங்கப்படும் வட்டியை விட 0.25% கூடுதலாக வட்டி 7.50% இந்த தொடர் இட்டு வைப்புத் திட்டத்திற்கு வழங்கப்படும். ஒரு மாதத்திற்கு செலுத்தப்படும் தொகை ரூ.1,000/ எனில் வருட இறுதியில் அசல் வட்டியுடன் சேர்த்து ரூ.13,000/ கிடைக்கும். இத்தொகை அவர்களின் குழந்தைகளின் படிப்பு செலவு, மருத்துவச் செலவு மற்றும் இதர செலவுகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

எனவே கூட்டுறவுத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இது போன்ற பல்வேறு திட்டங்களை பொதுமக்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் உள்ளிட்ட அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன்,

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல் பதிவாளர்/ செயலாட்சியர் கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) ச.சுப்பிர மணியன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இராஜேந்திர பிரசாத், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், கூடுதல் பதிவாளர்கள், இணைப் பதிவாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்



திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 9 புதிய மருத்துவ கட்டடங்களை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் தி.சி.செல்வவிநாயகம், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ஜெகதீஷ்குமார் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சேலத்தில் 17.12.2023 அன்று நடைபெற உள்ள 2 வது இளைஞர் அணி மாநில மாநாட்டிற்கு தமிழ்நாட்டு இளைஞர்களை நேரில் சந்தித்து மாநாட்டிற்கு அழைத்திடும் கன்னியாகுமரியில் தொடங்கி தமிழ்நாடு முழுவதும் சுற்றுபயணம் மேற்கொள்ளும் இருசக்கர வாகனப் பிரச்சார பேரணி நாகை மாவட்டத்திற்கு வருகை தரும் போது நாகை அவுரித்திடலில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமையில் வரவேற்பு அளிக்கப் பட்டது. உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மரிமுத்து, மாவட்டக் கழகப் பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர் ஆரூர்.மணிவண்ணன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. குமரேசன்

### நவம்பர் 24 (2006)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, ஆர்.கே.நகர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.**

**17வது வட்டக் கழகச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் – பகுதி செயலாளராகவும், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**வண்ணாரப்பேட்டை பால் நுகர்கோவர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், நாம்கோ இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**1962 – விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்

தி.மு.க.